பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 07 2024 **FRIDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- ட்ரோன் உற்பத்தித்துறை முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்மூலம், எட்டு லட்சத்து 74 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- தமிழகத்தில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியா — தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டி, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>>

நாட்டின் வேளாண் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சி, வானிலை கண்காணிப்பு ஆகியவற்றில் ட்ரோன்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச புதுமை கண்டுபிடிப்புகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், ட்ரோன் தொழில்நுட்பத்தை ஊக்குவிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

ட்ரோன் தொழில்துறை வளர்ச்சிக்காக உற்பத்தியுடன் கூடிய ஊக்குவிப்புத் திட்டம் அமல்படுத்தப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ட்ரோன் தொழில்துறை தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும் வகையில், தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று திரு பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Richard Marles'**-வுடன் தொலைபேசி வழியாக நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பரஸ்பரம் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இந்த பேச்சுக்களின்போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தொடர்ந்து இரண்டாவது முறையாக பாதுகாப்புத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு ராஜ்நாத் சிங்குக்கு, ஆஸ்திரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

<<<<<<>>>>>>

தமிழகத்தில் பொதுமக்களுக்கு அரசுத்துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் கிடைப்பதற்கான "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்மூலம், எட்டு லட்சத்து 74 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 11-ஆம் தேதியன்று தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் விரிவாக்க நிகழ்ச்சியிலும், 15-ஆம் தேதியன்று முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட விரிவாக்க நிகழ்ச்சியிலும் தாம் பங்கேற்கவுள்ளதையடுத்து அப்பகுதியை சேர்ந்த சட்டப்பேரவை – நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளுமாறு அவர்களுக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்மூலம், 14 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருவதாகவும் முதலமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு கரும்பு நிலுவைத் தொகை வழங்கவும், ஆலைகளின் நடைமுறை மூலதனத்திற்காகவும் 94 கோடியே 49

லட்சம் ரூபாய் கடன் தொகைக்கு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக மாநில வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், சர்க்கரை விற்பனை மூலம் கரும்புக்கான பணம் முழுமையாக வழங்க இயலாத சூழ்நிலையில் ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு மாநில அரசால் வழிவகை கடன் அனுமதிக்கப்பட்டு, அப்பணம் நிலுவையின்றி வழங்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருள் மற்றும் லாட்டரி சீட்டு விற்பனை தொடர்பாக புகார் செய்த சஞ்ஜீவராயன்பேட்டையை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாக கூறினார்.

இக்குற்றத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளையில் 37 சட்ட அலுவலர்கள் காலி பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்காக தகுதியுடைய வழக்கறிஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து தலைமைச்செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் விண்ணப்பத்தார்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் விண்ணப்பத்தினை **www.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இம்மாதம் 22-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஒடிஷா மாநிலத்தில் இருந்து நாகை மாவட்ட கடல்வழியாக இலங்கைக்கு கடத்த முயன்ற சுமார் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான கஞ்சாவை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்த தகவல் அறிந்த தனிப்படையினர் வேளாங்கண்ணி அருகே கிழக்கு கடற்கரை சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டபோது அவ்வழியாக வந்த மூன்று கார்களை நிறுத்தி விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது காருக்குள் ஆயிரத்து 200 கிலோ கஞ்சா பொட்டலங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை கண்டறிந்த காவல்துறையினர் அதனையும், காரையும் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நீலகிரி, கோவை மாவட்டங்களின் மலைபகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

சென்னையை பொறுத்தவரை இரண்டு நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் வளைகுடா, தென்தமிழக கடலோரப்பகுதிகள், மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், இன்று முதல் மூன்று நாட்களுக்கு மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்றும் திரு பாலச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

*__இருவரிச்செய்திகள்__*

அமெரிக்காவின் வடக்கு கலிஃபோர்னியா மாகாணத்தில் பரவிய காட்டுத்தீ காரணமாக அப்பகுதியில் வசிக்கும் சுமார் 28 ஆயிரம் பேரை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கலிஃபோர்னிய வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தானின் ஹரிப்பூர் மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர், பத்து பேர் காயமடைந்தனர்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸில் நடைபெற்ற ஆன்மிக நிகழ்ச்சியில் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்தது தொடர்பாக நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகளை கொண்ட விசாரணை குழு நேற்று ஆலோசனை நடத்தியது.

<<<<<<>>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுமார் 21 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல்போக பாசனத்திற்கு இன்று முதல் 130 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் மத்திய அரசின் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்து தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு **R N Singh** ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

தூத்துக்குடியில் பயன்படுத்தப்பட்ட எண்ணெயை தூய்மைப்படுத்த மெக்னீசியம் சிலிகேட் சிந்தடிக் என்ற சேர்மத்தை சேர்த்ததால் கே எஃப் சி உணவகத்தின் உரிமத்தை உணவு பாதுகாப்புத்துறை ரத்து செய்தது.

<<<<<<>>>>>>

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின்கீழ் சுண்ணாம்புக்கல் சுரங்கத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மதுரையில் போதை மாத்திரைகள் மற்றும் மருந்துகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை ஆணையர் திரு லோகநாதன் எச்சரித்துள்ளார்.

<<<<<<>>>>>>

திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோயில் பகுதியில் வீட்டில் சாராயம் காய்ச்சிய மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியினரின் வெற்றிப்பேரணி மும்பையில் நேற்றிரவு நடைபெற்றது.

மரைன்ட்ரைவிலிருந்து, வான்கடே மைதானம் வரை திறந்தவெளி பேருந்தில் சென்ற இந்திய அணியினர் வழிநெடுங்கிலும் ஆயிரக்கணக்கான ரசிகர்களின் வாழ்த்துகளை பெற்றனர்.

<<<<<<>>>>>>

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியான்ஷு ரஜாவத் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-11 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **'Takuma Obayashi-**ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 17-21, 21-7, 21-8 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் **'Anthonisen - '** நெதர்லாந்தின் **''Alyssa** இணையை வென்றது.

<<<<<<>>>>>>

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இத்தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை மறுநாளும், மூன்றாவது ஆட்டம் வரும் 9-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. சேலத்தில் இரவு மணி 7.15-க்கு தொடங்கவுள்ள இப்போட்டியில் சென்னை அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆடவர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில், இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை, ஜெர்மனியின் **Constantin Frantzen – Hendrik Jebenes** இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை, ஜெர்மனியின் **Kewin Krawietz – Tim Puetz** இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<<>>>>>>**